X 2017

**SET-4**

**Series HRK**

**Code No. 10**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **23** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **17** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# SUMMATIVE ASSESSMENT – II

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* — *மொ. மதிப்பெண்கள் : 90*

*Time allowed : 3 hours* — *Maximum Marks : 90*

**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது :**

**This question paper is divided into four Sections :**

| | | |
|---|---|---|
| **பிரிவு அ** : படித்தல் உரைநடைப்பகுதி | | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION A** : Reading Comprehension | | *15 Marks* |
| **பிரிவு ஆ** : எழுதுதல் | | *20 மதிப்பெண்கள்* |
| **SECTION B** : Writing | | *20 Marks* |
| **பிரிவு இ** : இலக்கணம் | | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION C** : Grammar | | *15 Marks* |
| **பிரிவு ஈ** : இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | | *40 மதிப்பெண்கள்* |
| **SECTION D** : Literature / Text Books | | *40 Marks* |

## பிரிவு அ (படித்தல் உரைநடைப்பகுதி)

### SECTION A (Reading Comprehension)

1. பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை எழுதுக : 5

சீவகசிந்தாமணிக்கு அடுத்தபடியாகப் போற்றப்படும் சமணக் காப்பியம், தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணி. இது விருத்தப்பாவால் இயற்றப்பட்டது. 2330 செய்யுள்கள் உடையது. ஸ்ரீபுராணம் என்னும் வடமொழிச் சைனநூல் உள்ள திவிட்டன் விசயன் என்பவரின் கதையை விளக்கும் காப்பியம் இது. பலவகை நிலங்களின் வளங்களும், நாடுநகரச் சிறப்புகளும் தமிழ் மரபின்படி இங்கே அழகாக வருணிக்கப்பட்டுள்ளன. சிந்தாமணி போலவே இந்த நூலின் முடிவிலும் துறவும் முத்தியும் விளக்கப்படுகின்றன. செய்யுள்கள் எல்லாம் இனிய ஓசைநயம் வாய்ந்தவை; இயல்பான ஓட்டம் உடையவை; இவற்றின் தமிழினிமைக்காக இவற்றைப் பலரும் படித்துப் பாராட்டுவது வழக்கம். இயற்கை அழகை விளக்கிப் பாடும் பாட்டுகள் சிறந்த சொல்லோவியங்களாக உள்ளன. விருத்தப்பாவைக் கையாள்வதில் இவர் சீவகசிந்தாமணி ஆசிரியரைப் பின்பற்றியபோதிலும், சில இடங்களில் அவரையும் விஞ்சிவிட்டார் என்று கூறலாம்.

**வினாக்கள் :**

(i) சூளாமணியின் ஆசிரியர் யார் ?

(அ) சிந்தாமணி

(ஆ) திருத்தக்கதேவர்

(இ) தோலாமொழித்தேவர்

(ஈ) விசயன்

(ii) இந்நூல் யாருடைய கதையை விளக்குகிறது ?

(அ) தோலாமொழித்தேவர்

(ஆ) திவிட்டன் விசயன்

(இ) இளங்கோவடிகள்

(ஈ) அரசர்கள்

(iii) இந்நூலில் விளக்கப்படும் கருத்து யாது ?

(அ) விருத்தப்பா

(ஆ) நாடுகளின் சிறப்பு

(இ) துறவும் முத்தியும்

(ஈ) ஓசைநயம்

(iv) சூளாமணியில் உள்ள செய்யுள்களின் எண்ணிக்கை

(அ) 3320

(ஆ) 2330

(இ) 2230

(ஈ) 3220

(v) எந்தவகைப் பாக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன ?

(அ) வெண்பா

(ஆ) வஞ்சிப்பா

(இ) குறட்பா

(ஈ) விருத்தப்பா

**2.** பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை எழுதுக : *5*

சோவியத் விண்கலத்தில் 1984-இல் பயணித்த ராகேஷ் ஷர்மாவை அடுத்து, விண்வெளிக்குச் சென்ற முதல் இந்திய வீராங்கனை எனும் பெருமைக்குரியவர் கல்பனா சாவ்லா. அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா அனுப்பிய கொலம்பியா விண்கலத்தில் பயணம் செய்து பூமிக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது விண்கலம் வெடித்துச் சிதறியதால் உயிரிழந்தார். இவர் நினைவாக 'கல்பனா சாவ்லா' விருது 2003 முதல் வழங்கப்படுகிறது. வீரதீரச் செயல் புரிந்த தமிழக மகளிரைச் சிறப்பிக்கும் வகையில் கல்பனா சாவ்லா விருது ஆண்டுதோறும் சுதந்திரதின விழாவின்போது வழங்கப்படுகிறது. இவ்விருது பெற்றவர்களுக்கு ஐந்து லட்ச ரூபாய் ரொக்கப் பரிசும் தங்கப்பதக்கமும் வழங்கப்படுகிறது. முதலாவது கல்பனா சாவ்லா விருது கராத்தே நிபுணர் ரேஷ்மா சர்மாவுக்கு வழங்கப்பட்டது. இரண்டாவது முறை இவ்விருது 2011-இல் டாக்டர் எஸ். சங்கீதாவுக்கு (திருச்சி வருவாய்த் துறை கோட்ட அலுவலர் - R.D.O.) வழங்கப்பட்டது.

**வினாக்கள் :**

(i) சோவியத் விண்கலத்தில் விண்வெளிக்குச் சென்ற வீராங்கனை

(அ) விசாலாட்சி

(ஆ) இரத்தினா

(இ) சானியா மிர்சா

(ஈ) கல்பனா சாவ்லா

(ii) அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பின் பெயர்

(அ) ஸ்ரீஹரிகோட்டா

(ஆ) கொலம்பியா

(இ) நாசா

(ஈ) கேரளம்

(iii) கல்பனா சாவ்லா விருது எந்த ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது ?

(அ) 2003

(ஆ) 1984

(இ) 2013

(ஈ) 1893

(iv) கல்பனா சாவ்லா - முதல் விருதினைப் பெற்றவர்

(அ) டாக்டர் எஸ். சங்கீதா

(ஆ) ராகேஷ் ஷர்மா

(இ) ரேஷ்மா ஷர்மா

(ஈ) வள்ளியம்மை

(v) கல்பனா சாவ்லா விருதின் பரிசுத் தொகை

(அ) மூன்று இலட்சம்

(ஆ) ஐந்து இலட்சம்

(இ) நான்கு இலட்சம்

(ஈ) இரண்டு இலட்சம்

**3.** பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை எழுதுக : 5

எஸ். ஆர். ரங்கநாதன் இந்திய நூலகவியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர். இவர் சீர்காழி இராமாமிர்தம் ரங்கநாதன் என்பவர் ஆவார். 1892-இல் சீர்காழியில் இவர் பிறந்தார். இவர் மங்களூர், கோயம்புத்தூர், சென்னைப் பல்கலைக்கழகங்களில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றினார். நூலகவியலாளரான இவர், நூலகவியலின் ஐந்து விதிகளை அறிமுகப்படுத்தினார். இவரே கோலன் நூற்பகுப்பு முறையை உருவாக்கியவராவார். நூலகவியலுக்கு இவர் செய்த பங்களிப்புக்காக, இந்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கிச் சிறப்பித்தது.

**வினாக்கள் :**

(i) எஸ். ஆர். ரங்கநாதன் பிறந்த ஊர்

(அ) சிதம்பரம்

(ஆ) சீர்காழி

(இ) சிறுவாணி

(ஈ) வாணியம்பாடி

(ii) எஸ். ஆர். ரங்கநாதன் சிறப்புப் பெயர்

(அ) அறிவியல் முன்னோடி

(ஆ) இரும்பு மனிதர்

(இ) நூலக நண்பர்

(ஈ) இந்திய நூலகவியலின் தந்தை

(iii) இவர் ஆற்றிய பணி

(அ) அறிவியல் வல்லுநர்

(ஆ) சட்டப் பேராசிரியர்

(இ) கணிதப் பேராசிரியர்

(ஈ) நூலகப் பணியாளர்

(iv) இவர் பெற்ற விருது

(அ) பத்ம விபூஷண்

(ஆ) பத்மஸ்ரீ

(இ) செவாலியே

(ஈ) அர்ச்சுனா

(v) எஸ். ஆர். ரங்கநாதன் உருவாக்கியது

(அ) ஆர்க்கிமிடீஸ் தத்துவம்

(ஆ) புவிஈர்ப்புவிசை

(இ) ஒளிக்கற்றை

(ஈ) கோலன் நூற்பகுப்பு முறை

## பிரிவு ஆ (எழுதுதல்)

## SECTION B (Writing)

**4.** உங்கள் பகுதிக்கு பேருந்து நிழற்குடை ஒன்று அமைத்துத் தருமாறு வேண்டி சென்னை மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் எழுதுக. 8

**அல்லது**

விடுதியில் தங்கிப் படிக்கும் நீ பொதுத் தேர்விற்குப் பாடத்தைத் திட்டமிட்டுப் படிக்கும் முறையை விளக்கி பெற்றோருக்குக் கடிதம் எழுதுக.

எக்கடிதமாயினும் உனது முகவரி : அ. குமரன் / அ. குமரி எண் : 11, வாசகி வீதி, திருமயிலம், சென்னை - 5 எனக் கொள்க.

5. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒரு** பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக : 8

(i) முன்னுரை – முயற்சியின் உயர்வு – பெருமக்கள் வாழ்வு – முயன்றால் முடியாதது இல்லை – சோதனையும் சாதனையாகலாம் – வெற்றிக் கனிகள் – முடிவுரை.

(ii) முன்னுரை – அறிவியல் மாற்றம் – சமூகப் பயன்பாடு – அனைத்திலும் அறிவியல் – பயன்படுத்தும் நெறிமுறைகள் – அறிவியல் காப்போம் – பொருளாதாரம் பெருக்குவோம் – இளைஞர்களின் கடமை – முடிவுரை.

(iii) முன்னுரை – இளைய சமுதாயம் – சமுதாயத் தொண்டு – மாணவப் பருவத்தின் பயன்பாடுகள் – சமூகச் சிந்தனைகள் – சாரண சாரணியர் – செஞ்சிலுவைச் சங்கம் – உறுப்பினராதல் – நாட்டுநலப்பணிகள் செய்தல் – முடிவுரை.

6. உங்கள் பகுதியில் நடைபெற்ற 'தூய்மையான இந்தியா' குறித்த விழிப்புணர்வு முகாம் – அறிக்கை எழுதுக. 4

**அல்லது**

உங்கள் பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர்தினவிழா குறித்து அறிக்கை எழுதுக.

## பிரிவு இ (இலக்கணம்)

**SECTION C (Grammar)**

3

**7.** சான்று தருக (**மூன்றனுக்கு** மட்டும்) :

(i) குறிஞ்சிநில உணவு

(அ) சூறையாடலால் வரும்பொருள்

(ஆ) செந்நெல், வெண்ணெல்

(இ) வரகு, சாமை

(ஈ) மலைநெல், தினை

(ii) திரிதல் விகாரம்

(அ) வாழைமரம்

(ஆ) வாழைப்பழம்

(இ) மரவேர்

(ஈ) பொற்குடம்

(iii) நிரை, நேர், நேர்

(அ) பலவாறு

(ஆ) பாலாறு

(இ) ஊர்மக்கள்

(ஈ) பெரியணை



10

(iv) வஞ்சப்புகழ்ச்சியணி

(அ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்

(ஆ) தேவர் அனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுக லான்

(இ) துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை

(ஈ) சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லில் பயனிலாச் சொல்

(v) மருதநிலத்திற்குரிய தெய்வம்

(அ) முருகன்

(ஆ) திருமால்

(இ) இந்திரன்

(ஈ) சந்திரன்

8. நிரப்புக (**மூன்றனுக்கு** மட்டும்) : *3*

(i) பொருளிலக்கணம் ____________ வகைப்படும்.

(அ) நான்கு

(ஆ) மூன்று

(இ) இரண்டு

(ஈ) ஐந்து

(ii) அந்தந்த நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு ஆகியன ________ எனப்படும்.

(அ) உரிப்பொருள்கள்

(ஆ) முதற்பொருள்

(இ) கருப்பொருள்கள்

(ஈ) பொருள்வகை

(iii) ஒருதலைக்காமம் என்பது _______.

(அ) அன்பின் ஐந்திணை

(ஆ) கைக்கிளை

(இ) பெருந்திணை

(ஈ) பாடாண்திணை

(iv) கண்டானை என்ற சொல் ____________ சீர்களைக் கொண்டுள்ளது.

(அ) இரண்டு

(ஆ) நான்கு

(இ) மூன்று

(ஈ) ஒன்று

(v) நேர் என்பதன் ஈற்றுச்சீர் _______ ஆகும்.

(அ) பிறப்பு

(ஆ) நாள்

(இ) மலர்

(ஈ) காசு

9. கூறியவாறு செய்க (**மூன்றனுக்கு** மட்டும்) : *3*

(i) வடமலை (எவ்வகைப் புணர்ச்சி என எழுதுக)

(அ) திசையோடு திசை

(ஆ) பண்புப்பெயர்

(இ) மகராஈற்றுப் புணர்ச்சி

(ஈ) திசைப் பெயரோடு பிறபெயர்

(ii) பைங்கூழ் (நிலைமொழியை எழுதுக)

(அ) பைசு

(ஆ) பசும்

(இ) பை

(ஈ) பசுமை

(iii) மருதநிலம் (சிறுபொழுதைக் குறிப்பிடுக)

(அ) எற்பாடு

(ஆ) நண்பகல்

(இ) காலை

(ஈ) வைகறை

(iv) சென்று (அசையைக் குறிப்பிடுக)

(அ) நேர் நிரை

(ஆ) நிரை நேர்

(இ) நேர் நேர்

(ஈ) நிரை நிரை

(v) விளரியாழ் (எவ்வகை நிலத்திற்குரியது)

(அ) குறிஞ்சி

(ஆ) நெய்தல்

(இ) முல்லை

(ஈ) மருதம்

**10.** சரியான தொடரைத் தேர்வு செய்க (**மூன்றனுக்கு** மட்டும்) :

(i) (அ) அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது புறத்திணை எனப்படும்.

(ஆ) அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது அகத்திணை எனப்படும்.

(இ) அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது ஐவகை நிலங்கள் எனப்படும்.

(ஈ) அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது சிறுபொழுது எனப்படும்.

(ii) (அ) பாலை நிலத்திற்குரிய நிலப்பகுதி கடலும் கடல்சார்ந்த இடமும் ஆகும்.

(ஆ) பாலை நிலத்திற்குரிய நிலப்பகுதி மலையும் மலைசார்ந்த இடமும் ஆகும்.

(இ) பாலை நிலத்திற்குரிய நிலப்பகுதி மணலும் மணல்சார்ந்த இடமும் ஆகும்.

(ஈ) பாலை நிலத்திற்குரிய நிலப்பகுதி காடும் காடு சார்ந்த இடமும் ஆகும்.

(iii) (அ) பா இரண்டு வகைப்படும்

(ஆ) பா நான்கு வகைப்படும்

(இ) பா மூன்று வகைப்படும்

(ஈ) பா ஐந்து வகைப்படும்

(iv) (அ) இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

(ஆ) இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது வஞ்சப்புகழ்ச்சி அணி.

(இ) இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது சிலேடையணி.

(ஈ) இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது பிறிதுமொழிதலணி.

(v) (அ) நேர், நேர் - புளிமா

(ஆ) நேர், நேர் - கூவிளம்

(இ) நேர், நேர் - கருவிளம்

(ஈ) நேர், நேர் - தேமா

**11.** இலக்கணக் குறிப்பு எழுதுக (**மூன்றனுக்கு** மட்டும்) : *3*

(i) பார்மொழிகள் அத்தனைக்கும் பாங்கான நற்றாயாம்
சீர்கொண்ட செந்தமிழே சிந்தனையில் ஏற்றிடுவாய்
பார்முழுதுஞ் சாற்றிடுவாய் பாய்ந்து

(அ) நேரிசை வெண்பா

(ஆ) இன்னிசைச் சிந்தியல் வெண்பா

(இ) கலிப்பா

(ஈ) நேரிசை ஆசிரியப்பா

(ii) ஒருசொல் இருபொருள்பட அமைந்து வருதல்

(அ) சொல்பின்வருநிலையணி

(ஆ) இரட்டுறமொழிதலணி

(இ) பின்வருநிலையணி

(ஈ) பொருள்பின்வருநிலையணி

(iii) கருங்குயில்

(அ) திசைப்பெயர்ப்புணர்ச்சி

(ஆ) பண்புப்பெயர்ப்புணர்ச்சி

(இ) மகரஈற்றுப்புணர்ச்சி

(ஈ) இயல்புப்புணர்ச்சி

(iv) வயலும் வயல்சார்ந்த இடமும்

(அ) முல்லைத்திணை

(ஆ) நெய்தல்திணை

(இ) மருதத்திணை

(ஈ) பாலைத்திணை

(v) மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைத்தல்

(அ) நொச்சித்திணை

(ஆ) உழிஞைத்திணை

(இ) பாடாண்திணை

(ஈ) பொதுவியல்திணை

## பிரிவு ஈ (இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள்)

## SECTION D (Literature / Text Books)

12. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கேற்ற விடையை தேர்ந்தெடுத்து எழுதுக : 5

காந்தியடிகள் சிறுவனாக இருந்தபோது, குஜராத்திப் பாடல் ஒன்றனைக் கேட்டார். தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை; தீமை செய்தவர்க்கும் நன்மையே செய், உண்மைப் பொருண்மை உண்டு என்ற அப்பாடல் இன்னா செய்யாமை (அகிம்சை) என்னும் கருத்தினை அவருள் விதைத்தது. அவர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது சிரவண பிதுர்பத்தி என்ற ஒரு நாடக நூலைப் படித்தார். அதில் சிரவணன் என்ற இளைஞன் பார்வையற்ற தன் தாய் தந்தையரைக் காவடியில் தூக்கிச் செல்லும் ஒரு காட்சிப்படம் இருந்தது. அதனைப் பார்த்தது முதல், தாமும் பெற்றோரிடம் அன்பு செலுத்த விரும்பினார்.

**வினாக்கள் :**

(i) காந்தி எந்த மொழிப் பாடலைக் கேட்டார் ?

(அ) வடமொழி

(ஆ) மராத்தி

(இ) இந்தி

(ஈ) குஜராத்தி

(ii) தீமை செய்தவர்க்கு நாம் என்ன செய்ய வேண்டும் ?

(அ) தீமை

(ஆ) நன்மை

(இ) எதுவும் செய்யக் கூடாது

(ஈ) வைதல் வேண்டும்

(iii) காந்தி படித்த நாடக நூல்

(அ) இரவீந்திரநாத் தாகூர்

(ஆ) அரிச்சந்திரன்

(இ) சிரவணபிதுர்பத்தி

(ஈ) பெற்றோர்நலன்

(iv) காந்தி பின்பற்றிய கொள்கை யாது ?

(அ) அகிம்சை

(ஆ) உண்ணாவிரதம்

(இ) விடுதலைபெறல்

(ஈ) தூய்மை

(v) பார்வையற்ற தாய்தந்தையரை இளைஞன் எவ்வாறு தூக்கிச் சென்றான் ?

(அ) குதிரைமீது

(ஆ) வண்டியில்

(இ) காவடியில்

(ஈ) தோள்களில்

13. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கேற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 5

'வினையே ஆடவர்க்குயிர்' என்கிறது குறுந்தொகை. 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை' என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள் குடும்பத்தினைப் பொறுப்புடன் நடத்த வேண்டும் எனவும், பெண்கள் கடல்கடந்து செல்லக்கூடாதெனவும் கூறிவந்தனர். இன்று, இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில், இருவரும் வருவாய் ஈட்டினால்தான் குடும்பத்தினைச் சிறப்பாக நடத்த இயலும். பள்ளிக் கல்வியை முடித்த ஒருவர், அதற்கு மேல் என்னென்ன படிப்புகளை மேற்கொண்டு வேலை வாய்ப்பினைப் பெறலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஒவ்வொருவரும் பெறுதல் வேண்டும். தற்போது மேனிலைக்கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை என்னும் நிலை உருவாகியுள்ளது. நாள்தோறும் கல்வியில் புதுப்புதுத் துறைகள் உருவாகிக்கொண்டே வருகின்றன. குறிப்பாகப் பணிவாய்ப்புக்கு உரிய கல்வித் தகுதிகளைத் தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி எனப் பலவாகப் பகுக்கலாம்.

**வினாக்கள் :**

(i) குறுந்தொகையின் கூற்று யாது ?

(அ) முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை

(ஆ) தீதும் நன்றும் பிறர்தர வாரா

(இ) அவ்வழி நல்லை வாழியநிலனே

(ஈ) வினையே ஆடவர்க்கு உயிர்

(ii) எது முற்றிலும் மாறிவிட்டது ?

(அ) பெண்கள் கடல் கடந்து செல்லக்கூடாதென்பது

(ஆ) பெண்கள் திருமணம் செய்யக்கூடாதென்பது

(இ) பெண்கள் சமூகநலனுக்கு வரக்கூடாதென்பது

(ஈ) பெண்கள் மேடைகளில் பேசக்கூடாதென்பது

(iii) குடும்பத்தினைச் சிறப்பாக நடத்துவது எவ்வாறு ?

(அ) ஆண்மட்டும் வருவாய் ஈட்டுதல்

(ஆ) ஆண்பெண் இருவரும் வருவாய் ஈட்டுதல்

(இ) பெண் மட்டும் வருவாய் ஈட்டுதல்

(ஈ) குழந்தைகள் வருவாய் ஈட்டுதல்

(iv) பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைக் கல்வி எது ?

(அ) எதுவும் தேவையில்லை

(ஆ) எட்டாம் வகுப்பில் தேர்ச்சி

(இ) பத்தாம் வகுப்பில் தேர்ச்சி

(ஈ) மேனிலைக் கல்வியில் தேர்ச்சி

(v) கல்வியில் எத்தகைய துறைகள் உருவாகின்றன ?

(அ) அறிவியல் துறைகள்

(ஆ) புதுப்புதுத் துறைகள்

(இ) இலக்கியத் துறைகள்

(ஈ) வணிகத் துறைகள்

**14.** செய்யுளடி வினாவிற்குரிய விடையைத் தேர்வு செய்து எழுதுக : *4*

கண்ட போதினில் வால்குழைத் தரியமெய் கலங்கிக் கொண்டு மென்மெல நடந்துதன் பெருஞ்சிரம் குனித்துத் தண்ட ளிர்ப்பதத் தெரிசனைக் கெனச்சலாம் உரைத்துத் தெண்டன் இட்டது வள்ளுகிர் திண்டிறல் புலியே.

**வினாக்கள :**

(i) இப்பாடல் இடம் பெற்ற நூல்

(அ) கலித்தொகை

(ஆ) தேவாரம்

(இ) சீறாப்புராணம்

(ஈ) நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்

(ii) வால்குழைத்து வந்தது எது ?

(அ) கரடி

(ஆ) சிங்கம்

(இ) புலி

(ஈ) நாய்

(iii) புலி யாருக்குச் சலாம் உரைத்தது ?

(அ) அருகதேவன்

(ஆ) வானம்

(இ) பூமி

(ஈ) முகம்மது நபி

(iv) உகிர் - பொருள் தருக.

(அ) முடி

(ஆ) நகம்

(இ) பாதம்

(ஈ) வால்

**15.** பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விளக்கமான விடையளிக்க : *10*

(i) தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக.

(ii) வள்ளலார் அருளிய பாடல்கள் பற்றியும் தமிழ்ப் பற்றுக் குறித்தும் விளக்கி எழுதுக.

(iii) (அ) கடல் வாணிகம் குறித்து எழுதுக.

(ஆ) உழவுத் தொழில் குறித்து எழுதுக.

(iv) கலை, அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க.

(v) அறவழி விடுதலைப் போர் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**16.** எவையேனும் **இரண்டு** செய்யுள் வினாக்களுக்கு விடையளிக்க : 8

(i) பொருள்செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

(ii) இறைவன் திருவடியை வணங்குகின்றவருக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை ?

(iii) புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(iv) (அ) சாதனைப் பூக்கள் என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார் ?

(ஆ) எப்படி நடந்திட வேண்டுமென இளந்திரையன் கூறுகிறார் ?

**17.** ஏதேனும் **ஒரு** தலைப்பில் துணைநூல் கட்டுரை எழுதுக : 8

(i) தற்காலத் தொல்லியல் ஆய்வுகள்

(ii) அடித்தளம்

(iii) நூலகம்